# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I
8075271
C

1. District : மாவட்டம் கன்னியாகுமரி
PS: காவல்நிலையம் V&AC Nagercoil
Year: ஆண்டு 2020
FIR No: முத.அ.எண் 5/2020
Date: நாள் 20.11.2020

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: The PC Act 1988 (Amended in 2018) Sections பிரிவுகள்: 7 of the PC Act 1988 (Amended in 2018)
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : Cr.P.C 102 Cr.P.C

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from : நாள் முதல் 19.11.2020
Date to : நாள் வரை 20.11.2020
Time Period : நேர அளவு
Time from : நேரம் முதல் 21.15 hrs
Time to : நேரம் வரை 02.30 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 20.11.2020
Time : நேரம் 10.30 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்
Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்துமூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் வடசேரி வன அலுவலக Barbet House வடக்கு சுமார் 3 கி.மீ
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு.A.V.மூர்த்தி
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு.ஐயப்பன்பிள்ளை
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality : நாட்டினம் இந்தியன்
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் ஆய்வுகுழுஅலுவலர்
(g) Address : முகவரி திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி மற்றும் கன்யாகுமரி மாவட்டங்கள்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு.P.பெருமாள், மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1,
மார்த்தாண்டம் @ கோழிப்போர்விளை,
கன்னியாகுமரி மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

தகவல் கொடுப்பவரால் தாமதம்

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

ஏதிரி : திரு.பெருமாள், மோட்டார் வாகன ஆய்வாளர், நிலை-1 மார்த்தாண்டம் @ கோழிப்போர்விளை, கன்னியாகுமரி மாவட்டம்

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது :- நான் இன்று 20.11.2020-ம் தேதி காலை 10.30 மணிக்கு கோ.மதியழகன், காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு காண்காணிப்புத்துறை, கன்னியாகுமரிபிரிவு, நாகர்கோவில் ஆகிய நான் அலுவலக பொறுப்பில் இருக்கும்போது திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களின் ஆய்வுக்குழு அலுவலர் திரு.A.V.மூர்த்தி அவர்கள் நிலையம் ஆஜராகி ஒரு புகார் மனுவுடன் செயல்முறை நடவடிக்கை நாள்- 19.11.2020யும் இணைத்து நடவடிக்கை எடுக்க வேண்டி கொடுத்தார். அந்த மனுவை பெற்று 20.11.2020- ம் தேதி காலை 11.30 மணிக்கு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை கன்னியாகுமரி பிரிவு கு.எண். 5/2020 u/s 7 of the PC Act 1988 (Amended in 2018) and 102 Cr.P.C. ஆக எதிரி திரு. P. பெருமாள், மோட்டார் வாகன ஆய்வாளர், நிலை - I மார்த்தாண்டம் என்பவர் மீது வழக்குபதிவு செய்தேன். அந்த மனு விபரம் பின்வருமாறு அனுப்புநர் திரு.A.V.மூர்த்தி, திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி மற்றும கன்னியாகுமரி மாவட்டங்களின் ஆய்வுக்குழு அலுவலர். திருநெல்வேலி மாவட்டம். பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு (ம) கண்காணிப்பு துறை, கன்னியாகுமரி பிரிவு, நாகர்கோவில். அய்யா,பொருள்: கன்னியாகுமரி மாவட்டம் - மார்த்தாண்டம் வட்டார போக்கு வரத்து அலுவலக மோட்டார் வாகன ஆய்வாளரின் வாகனத்தின் மீது திடீர் இணை ஆய்வு விவரம் - மேல் நடவடிக்கைக்கு அனுப்புவது சம்மந்தமாக. நான் 19.11.2020-ம்

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed Tmt. Siva Sankari ..... Rank Inspector to take up the Investigation / Refused Investigation / transferred to PS ..................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

20.11.20
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

20.11.20 at 14.00 hrs.

Name: பெயர் G. MATHIALAGAN
Rank: நிலை DSP, ........No. எண் ..........
V&AC Nagercoil

முதல் தகவல் அறிக்கை தொடர்ச்சி பக்கம் 3

நான் 19.11.2020-ம் தேதி சுமார் 18.00 மணிக்கு அலுவலகம் முடிந்து பஸ்ஸில் வந்து கொண்டிருந்த போது நாகர்கோவில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை காவல் துணை கண்காணிப்பாளரிடமிருந்து அலைபேசிமூலம் கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில் இரவு சுமார் 19.00 மணியளவில் நாகர்கோவில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை அலுவலகத்திற்கு சென்று காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களை சந்தித்து, முளகுமூடு கோழிப்போர்விளையில் அமைந்துள்ள கன்னியாகுமரி மாவட்டம் மார்த்தாண்டம் வட்டார போக்கு வரத்து அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர், நிலை-I திரு.P.பெருமாள் என்பவர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் நடைபெறும் பணிகளுக்கு வாகன உரிமையாளர்களிடமும் ஓட்டுநர் உரிமம் பெற வரும் நபர்களிடமும் அந்தந்த வேலைகளை செய்துகொடுக்க புரோக்கர்கள் மூலம் லஞ்ச பணம் வசூல் செய்து அதனை தான் பயன்படுத்திவரும் TN-72 BH-9669 என்ற எண் கொண்ட Etios காரில் கொண்டு செல்வதாக ரகசிய தகவல் கிடைத்ததாக கூறியதன் அடிப்படையில் நேற்று 19.11.2020-ம் தேதி இரவு சுமார் 08.15 மணிக்கு நாகர்கோவில்-திருநெல்வேலி மெயின் ரோட்டில் ஒழுகினசேரி பாலத்திற்கு முன்னர் ஒழுகினசேரி ரோட்டில் கண்காணித்துகொண்டு நின்று கொண்டிருந்தபோது அவ்வழியே சுமார் 09.00 மணிக்கு தெற்கிலிருந்து வடக்குநோக்கி வந்த TN-72-BH-9669 எண்கொண்ட Etios வெள்ளைநிற காரை சோதனை செய்த போது அதில் வாகனத்தின் ஓட்டுநர் இருக்கையில் இருந்தவர் தனது பெயர் T.நடேஷ்குமார், என்றும் அவரது இடதுபுற முன் இருக்கையில் இருந்தவர் மார்த்தாண்டம் மோட்டார் வாகன ஆய்வாளர் P.பெருமாள் என்றும், வாகனத்தின் பின் இருக்கையில் இருந்தவர் M.முருகையா என்றும், மேலும் அந்த வாகனமானது தனது சித்தி மகன் திரு.பழனிகுமார் என்பவருடைய பெயரில் உள்ள வாகனம் என மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.P.பெருமாள் தெரிவித்தார். எனவே ஏற்கனவே கிடைத்த ரகசிய தகவலின்படி கூறப்பட்ட நபர் அவர் தான் என தெரிந்து அந்த இடமானது மெயின் ரோடு என்பதாலும் அந்த இடத்தில் வைத்து திடீர் சோதனை மேற்கொண்டால் பொதுமக்கள் கூட்டம் கூடி போக்குவரத்து நெரிசல் ஏற்படும் என்பதாலும் அந்த வண்டியில் இருந்த மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.P.பெருமாள் என்பவரையும் மற்ற நபர்களையும் அந்த வாகனத்துடன் அழைத்துக்கொண்டு வடசேரியில் உள்ள மாவட்ட வன அலுவலர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள விருந்தினர் மாளிகையிலுள்ள BARBET HOUSE–ன் வாசல் முன்பக்கம் நிறுத்தி அந்த வாகனத்தில் வந்தவர்களை BARBET HOUSE–ன் மின்விளக்கு வெளிச்சத்தில் வைத்து சோதனை செய்யப்பட்டது. அப்போது வாகனத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர், திரு. P.பெருமாள் என்பவர் முன்பக்க இடது சீட்டிலும், பின் சீட்டில் போக்குவரத்து அலுவலகத்தில் கணிணி இயக்குவதற்காக அவரால் நியமிக்கப்பட்ட அவரது அண்ணன் மகனான திரு.முருகையா என்பவரும் வாகனம் ஓட்டுவதற்கு அழைத்துவரப்பட்ட அவரது அக்கா மகன் செல்வன்.நடேஷ்குமார் என்பவரும் உடன் இருந்தார்கள். திரு.பெருமாள் அவர்களை சோதனை செய்ததில் அவர் அணிந்திருந்த காக்கி நிற பேண்டின் வலது பக்க பாக்கெட்டில் ரூபாய் 9,000/- இருந்தது. பின்னர் அந்த வாகனமானது சோதனை செய்யப்பட்டது. அந்த வாகனத்தின் முன்புற இடதுபக்க Dash Board ஐ திறந்து சோதனை செய்தபோது அதில் வெள்ளை காகிதத்தால் சுற்றப்பட்ட ஒரு பொதி இருந்தது. அதை பிரித்து பார்த்தபோது அதில் ரப்பர் பேண்ட் போடப்பட்ட 4 ஐநூறு ரூபாய் கட்டுகள் இருந்தது. அதை எண்ணிப்பார்த்த போது அவற்றில் மொத்தம் ரூபாய் 1,60,000/- இருந்தது. இந்த பணம் பற்றி மோட்டார் வாகன ஆய்வாளரிடம் கேட்டபோது அவர் அது தன்னுடைய நகைகளை அடகு மீட்க சேமித்த பணம் என கூறினார். ஆனால் அதற்கான ஆவணங்கள் எதையும் காண்பிக்கவில்லை எனவே சரியான முகாந்திரம் தெரிவிக்காததால் அந்தப் பணம் லஞ்சப்பணமாக இருக்கும் என கருதி விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அந்த வாகனத்தின் டிக்கியை சோதனை செய்தபோது அதில் மோட்டார் வாகன ஆய்வாளரால் 19.11.2020 தேதியிட்டு கையொப்பம் இடப்பட்ட புதிய வாகன பதிவுக்கான விண்ணப்பம் அடங்கிய 10 கோப்புகளும், வாகன தகுதி சான்று பெறுவதற்கான விண்ணப்பம் அடங்கிய 10 கோப்புகளும் காணப்பட்டது. மேற்படி அசல் ஆவணங்கள் மீது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு விண்ணப்பதாரர்களுக்கு சான்றிதழ் கொடுக்கப்பட வேண்டுமென்பதால் அவற்றிற்கு நகல் எடுத்து சான்றொப்பம் பெற்று கைப்பற்றப்பட்டது. அசல்

ஆவணங்கள் அவரிடம் திருப்பி ஒப்படைக்கப்பட்டது. இந்த திடீர் சோதனையின் மூலம் கைப்பற்றப்பட்ட பணத்திற்கு மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.பெருமாள் தகுந்த முகாந்திரம் தெரிவிக்காததால் அவர் வட்டார போக்கு வரத்து அலுவலகத்தில் நடைபெறும் பணிகளுக்கு வாகன உரிமையாளர் களிடமும் ஓட்டுநர் உரிமம் பெற வரும் நபர்களிடமும் அந்தந்த வேலைகளை செய்ய லஞ்சமாக பணம் பெற்றிருக் கலாம் என கருதி அவரால் சரியான முகாந்திரம் தெரிவிக்கப்படாத பணம் ரூ.1,69,000/- ஐ செயல் முறை நடவடிக்கை தயாரித்து கைப்பற்றப்பட்டது. அவ்வாறு கைப்பற்றப்பட்ட பணம், ஆவணங்களின் சான்றிட்ட நகல்கள் மற்றும் செயல்முறை நடவடிக்கை இத்துடன் இணைத்து மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.P.பெருமாள் என்பவர் மீது வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டி கேட்டுக் கொள்கிறேன். ஒப்பம் 20.11.2020 A.V.மூர்த்தி, திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களின் ஆய்வுக்குழு அலுவலர். திருநெல்வேலி மாவட்டம். Sir, Received this complaint on 20.11.2020 at 10.30 hrs and after getting oral permission from the Superintendent of Police, Southern Range, a case in Nagercoil V&AC, Cr.No.05/2020 U/s 7 of Prevention of Corruption Act 1988 (Ammended in 2018) and 102 Cr.P.C was registered on 20.11.2020 at 11.30 hrs. The original FIR along with original complaint petition sent to the CJM and Special Judge Court Nagercoil and copies sent to the officers concerned. Sd.G.Mathialagan, 20.11.2020, Deputy-Suptd of Police, V&AC, Nagercoil.

திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களின் ஆய்வுக்குழு அலுவலர் திரு.A.V.மூர்த்தி அவர்களின் செயல்முறை நடவடிக்கை 19.11.2020-ம் தேதி இரவு சுமார் 09.15 மணியளவில் நாகர்கோவில்-திருநெல்வேலி ரோட்டில் வடசேரி சந்தை எதிரில், MGR சிலைக்கு அருகில் அமைந்துள்ள கன்னியாகுமரி மாவட்ட வன அலுவலர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள BARBET HOUSE–ல் வைத்து கீழ்க்கண்ட அலுவலர்கள் முன்னிலையில் நடைபெற்ற திடீர் இணை தணிக்கையின் போது தயார் செய்யப்பட்ட செயல்முறை நடவடிக்கை குறிப்பு முன்னிலை: திரு.A.V.மூர்த்தி, திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களின் ஆய்வுக்குழு அலுவலர். திருநெல்வேலி மாவட்டம். 1) திரு.G.மதியழகன், காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, கன்னியாகுமரி பிரிவு, நாகர்கோவில். 2) திரு.S.ஜாண் பெஞ்சமின், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, கன்னியாகுமரி பிரிவு, நாகர்கோவில். முளகுமூடு கோழிப்போர்விளையில் அமைந்துள்ள கன்னியாகுமரி மாவட்டம் மார்த்தாண்டம் வட்டார போக்கு வரத்து அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர், நிலை-I திரு.P.பெருமாள் என்பவர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் நடைபெறும் பணிகளுக்கு வாகன உரிமையாளர்களிடமும் ஓட்டுநர் உரிமம் பெற வரும் நபர்களிடமும் அந்தந்த வேலைகளை செய்துகொடுக்க புரோக்கர்கள் மூலம் லஞ்சம் வசூல் செய்து அதை புரோக்கரிடமிருந்து மொத்தமாக வசூல் செய்து தான் பயன்படுத்திவரும் TN-72 BH-9669 என்ற எண் கொண்ட Etios காரில் கொண்டு செல்வதாக ரகசிய தகவல் கிடைத்ததன் அடிப்படையில் இன்று 19.11.2020-ம் தேதி இரவு சுமார் 08.15 மணிக்கு நாகர்கோவில்-திருநெல்வேலி மெயின் ரோட்டில் ஒழுகினசேரி பாலத்திற்கு முன்னர் ஒழுகினசேரி ரோட்டில் கண்காணித்துகொண்டு நின்று கொண்டிருந்தபோது அவ்வழியே சுமார் 09.00 மணிக்கு தெற்கிலிருந்து வடக்குநோக்கி வந்த TN-72-BH-9669 எண்கொண்ட Etios வெள்ளைநிற காரை சோதனை செய்யும் பொருட்டு நிறுத்தி விசாரித்த போது வாகனத்தின் ஓட்டுநர் இருக்கையில் இருந்தவர் தனது பெயர் T.நடேஷ்குமார், த/பெ.M.தங்கம் என்றும் அவரது இடதுபுற முன் இருக்கையில் இருந்தவர் மார்த்தாண்டம் மோட்டார் வாகன ஆய்வாளர் P.பெருமாள் என்றும், வாகனத்தின் பின் இருக்கையில் இருந்தவர் M.முருகையா, த/பெ.V.மூக்கையா என்றும், மேலும் அந்த வாகனமானது தனது சித்தி மகன் திரு.பழனிகுமார் என்பவருடைய பெயரில் உள்ள வாகனம் என மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.P.பெருமாள் தெரிவித்தார். எனவே ஏற்கனவே கிடைத்த ரகசிய தகவலின்படி கூறப்பட்ட நபர் அவர் தான் என தெரிந்து அந்த இடமானது மெயின் ரோடு என்பதாலும் அந்த இடத்தில் வைத்து திடீர் சோதனை மேற்கொண்டால் பொதுமக்கள் கூட்டம் கூடிவிடுவார்கள் என்பதாலும் போக்குவரத்து நெரிசல் ஏற்படும் என்பதாலும் அந்த வண்டியில் இருந்த மோட்டார் வாகன

ஆய்வாளர் திரு.P.பெருமாள் என்பவரையும், அவரது வாகனத்தை ஓட்டி வந்த செல்வன்.T.நடேஷ்குமார், த/பெ.M.தங்கம் என்பவரையும், அவரது வாகனத்தில் பின் இருக்கையில் அமர்ந்திருந்த திரு.M.முருகையா, த/பெ.V.மூக்கையா ஆகியோர்களை அவர்கள் வந்த வாகனத்துடன் அழைத்துக்கொண்டு வடசேரியில் உள்ள மாவட்ட வன அலுவலர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள BARBET HOUSE–ன் வாசல் முன்பக்கம் நிறுத்தி அந்த வாகனத்தில் வந்தவர்களை BARBET HOUSE–ன் மின்விளக்கு வெளிச்சத்தில் வைத்து சோதனை செய்யப்பட்டது. அப்போது வாகனத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர், திரு. P.பெருமாள் என்பவர் முன்பக்க இடது சீட்டிலும், பின் சீட்டில் போக்குவரத்து அலுவலகத்தில் கணிணி இயக்குவதற்காக அவரால் நியமிக்கப்பட்ட அவரது அண்ணன் மகனான திரு.முருகையா என்பவரும் வாகனம் ஓட்டுவதற்கு அழைத்துவரப்பட்ட அவரது அக்கா மகன் செல்வன்.நடேஷ்குமார் என்பவரும் உடன் இருந்தார்கள். அவர்களை கன்னியாகுமரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை காவல் துணை கண்காணிப்பாளர் திரு.G.மதியழகன், ஆய்வாளர் திரு.S.ஜாண் பெஞ்சமின் ஆகியோர்கள் முன்னிலையில் திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களின் ஆய்வுக்குழு அலுவலர் திரு.A.V.மூர்த்தி அவர்களால் சோதனை செய்யப்பட்டது. திரு.பெருமாள் அவர்களை சோதனை செய்ததில் அவர் அணிந்திருந்த காக்கி நிற பேண்டின் வலது பக்க பாக்கெட்டில் கத்தையாக ரூபாய் நோட்டுகள் இருந்தது. அதை எடுத்து எண்ணி பார்த்ததில் 1 இரண்டாயிரம் ரூபாய் நோட்டும், 9 ஐநூறு ரூபாய் நோட்டுக்களும், 9 இருநூறு ரூபாய் நோட்டுக்களும், 6 நூறு ரூபாய் நோட்டுகளும், 2 ஐம்பது ரூபாய் நோட்டுகளும் ஆக மொத்தம் ரூபாய் 9,000/- இருந்தது. .இந்த பணம் பற்றி மோட்டார் வாகன ஆய்வாளரிடம் கேட்டபோது சரியான முகாந்திரம் தெரிவிக்காததால் லஞ்சப்பணமாக இருக்கும் என கருதி விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது மேலும் அவரது பேண்ட் வலது பக்க பாக்கெட்டிலிருந்த மணிபர்சை சோதனை செய்தபோது ரூ.1100/- இருந்தது. இந்த பணம் பற்றி அவரிடம் கேட்டபோது தான் சொந்த செலவுக்காக வைத்திருந்த பணம் என தெரிவித்தார். எனவே அந்த பணம் அவரிடம் திருப்பி கொடுக்கப்பட்டது. அதன்பிறகு திரு.முருகையா அவர்களை சோதனை செய்ததில் அவர் அணிந்திருந்த பேண்டின் இடது பக்க பாக்கெட்டில் வைத்திருந்த மணிபர்சில் ரூபாய் நோட்டுகள் இருந்தது. அதை எடுத்து எண்ணி பார்த்ததில் ரூபாய் 900/- இருந்தது. இந்த பணம் பற்றி அவரிடம் கேட்டபோது தான் சொந்த செலவுக்காக வைத்திருந்த பணம் என தெரிவித்தார். எனவே அந்த பணம் அவரிடம் திருப்பி கொடுக்கப்பட்டது. அதன்பிறகு செல்வன்.நடேஷ்குமார் அவர்களை சோதனை செய்ததில் அவர் அணிந்திருந்த சட்டையின் இடது பக்க முன் பாக்கெட்டில் ரூபாய் நோட்டுகள் இருந்தது. அதை எடுத்து எண்ணி பார்த்ததில் 2 ஐம்பது ரூபாய் நோட்டுகளும், 5 பத்து ரூபாய் நோட்டும் ஆக மொத்தம் ரூபாய் 150/- இருந்தது. இந்த பணம் பற்றி அவரிடம் கேட்டபோது தான் கை செலவுக்காக வைத்திருந்த பணம் என தெரிவித்தார். எனவே அந்த பணம் அவரிடம் திருப்பி கொடுக்கப்பட்டது. பின்னர் அந்த வாகனமானது சோதனை செய்யப்பட்டது. அந்த வாகனத்தின் முன்புற இடதுபக்க Dash Board ஐ திறந்து சோதனை செய்தபோது அதில் வெள்ளை காகிதத்தால் சுற்றப்பட்ட ஒரு பொதி இருந்தது. அதை பிரித்து பார்த்தபோது அதில் ரப்பர் பேண்ட் போடப்பட்ட 4 ஐநூறு ரூபாய் கட்டுகள் இருந்தது. அதை எண்ணிப்பார்த்த போது அவற்றில் 3 கட்டுகளில் தலா 500x100 வீதம் ரூ.1,50,000/-ம் 4-வது கட்டில் 500x20 ரூ.10,000/-ம் ஆக மொத்தம் ரூபாய் 1,60,000/- இருந்தது. இந்த பணம் பற்றி மோட்டார் வாகன ஆய்வாளரிடம் கேட்டபோது அவர் அது தன்னுடைய நகைகளை அடகுமீட்க சேமித்த பணம் என கூறினார். ஆனால் அதற்கான ஆவணங்கள் எதையும் காண்பிக்கவில்லை எனவே சரியான முகாந்திரம் தெரிவிக்காததால் லஞ்சப்பணமாக இருக்கும் என கருதி விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அந்த வாகனத்தின் டிக்கியை சோதனை செய்தபோது அதில் மோட்டார் வாகன ஆய்வாளரால் 19.11.2020 தேதியிட்டு கையொப்பம் இடப்பட்ட புதிய வாகன பதிவுக்கான விண்ணப்பம் அடங்கிய கோப்புகள் 1. TN-75-AQ-9576 B.R.Abin Bright (Pages.1- 29) 2. TN-75-AQ-9561 S.Shaji, (Pages.1- 35) 3. TN-75-AQ-9524 G.S.Aswathi, (Pages.1- 33) 4. TN-75-AQ-9591 Leela Bai, (Pages.1- 35) 5. TN-75-AQ-9581 Jaison, (Pages.1- 33) 6. TN-75-AQ-9501 K.Shankar, (Pages.1- 33) 7. TN-75-AQ-9586 K.N.Abilash, (Pages.1- 35) 8. TN-75-AQ-9599 Cherian Mathai, (Pages.1-

29) 9. TN-75-AQ-9565 A.Subila, (Pages.1-35 ) 10. TN-75-AQ-9594 N.Sujith, (Pages.1- 35) மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.P.பெருமாள் அவர்களால் 18.11.2020 தேதியிட்டு கையொப்பம் இடப்பட்ட வாகன தகுதி சான்று பெறுவதற்கான விண்ணப்பம் அடங்கிய கோப்புகள் 1. TN-75-A-7770 Y.B.Rethinasamy (Pages.1- 15) 2. TN-75-AH-5116 Mohankumar, (Pages.1- 15) 3. TN-75-Q-5590 Kanagaraj, (Pages.1- 15) 4. TN-74-AJ-0355 Sathya Nesan, (Pages.1- 15) 5. TN-75-W-7413 Selva Dhas, (Pages.1- 15) 6. TN-75-L-8949 K.Sgumaran, (Pages.1- 17) 7. TN-75-Z-4669 Sudhakaran, (Pages.1- 15) 8. TN-75-AF-8710 Stanly Roy, (Pages.1- 15) 9. TN-75-AB-0284 Krishnadhas, (Pages.1-15 ) 10. TN-75-AH-6760 Mariyajose Nayagam, (Pages.1- 17) ஆகியவை காணப்பட்டது. மேற்படி அசல் ஆவணங்கள் மீது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு விண்ணப்பதாரர்களுக்கு சான்றிதழ் கொடுக்கப்பட வேண்டுமென்பதால் அவற்றிற்கு நகல் எடுத்து சான்றொப்பம் பெற்று கைப்பற்றப்பட்டது. அசல் ஆவணங்கள் அவரிடம் திருப்பி ஒப்படைக்கப்பட்டது. மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.பெருமாள் அவர்களை விசாரித்து அவரிடம் ஒரு வாக்குமூலம் பெறப்பட்டது. இந்த திடீர் சோதனையின் மூலம் கைப்பற்றப்பட்ட பணத்திறகு மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.பெருமாள் தகுந்த முகாந்திரம் தெரிவிக்காததால் அவர் வட்டார போக்கு வரத்து அலுவலகத்தில் நடைபெறும் பணிகளுக்கு வாகன உரிமையாளர் களிடமும் ஓட்டுநர் உரிமம் பெற வரும் நபர்களிடமும் அந்தந்த வேலைகளை செய்ய லஞ்சமாக பணம் பெற்றிருக்கலாம் என கருதி அவரால் சரியான முகாந்திரம் தெரிவிக்கப்படாத பணம் ரூ.1,69,000/-ஐ இந்த செயல் முறை நடவடிக்கையில் கைப்பற்றப்பட்டது. இந்த நடவடிக்கை குறிப்பு லஞ்ச ஒழிப்பு அலுவலகத்தில் இருந்து கொண்டுவரப்பட்ட மடி கணிணி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு லஞ்ச ஒழிப்பு அலுவலகத்தில் இருந்து கொண்டு வரப்பட்ட பிரிண்டர் மூலம் மாவட்ட வன அலுவலர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள BARBET HOUSE–ல் உள்ள மின் இணைப்பு மூலம் பிரிண்ட் எடுக்கப்பட்டது. இந்த சோதனைக்கான செயல்முறை நடவடிக்கைகள் இன்று 20.11.2020-ம் தேதி அதிகாலை 02.30 மணிக்கு முடிக்கப்பட்டது.

[signature] 20.11.20

G.MATHALAGAN
DSP, V&AC,
Nagercoil.